4. தகவல் கோரல்.

பேரவை நடைமுறை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, இன்று நான் விடுதியிலிருந்து வெளிவந்தவுடன் என்னை போலீசார் கைது செய்து அழைத்துச்சென்றார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்ற விஷயங்களையெல்லாம் திடீரென்று எழுந்து அவையிலே எழுப்புதல் கூடாது. அறையிலே வந்து என்னிடம் கூறவேண்டும். எழுத்து மூலமாக நடந்த சம்பவத்தை எழுதிக் கொடுத்து பிறகு, அனுமதிக்கப்பட்டால் அவையில் எழுப்ப வேண்டுமே தவிர, தனிப்பட்ட பிரச்சினைகளை இவ்வாறு திடீரென்று அவையில் எழுப்புதல் மரபல்ல.

திரு. மு. அம்பிகாபதி: இது ஒரு உறுப்பினருக்கு ஏற்பட்டப் பாதிப்பு, பேரவைத் தலைவர் அவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபோன்ற விஷயங்களை அறையில் வந்து சொல்ல வேண்டுமே தவிர, அவையில் எழுப்புவது முறையாகாது. திரு. பழனிவேல் அவர்கள் முதலில் நடந்த சம்பவம் குறித்து என்னிடம் எழுதிக் கொடுக்க வேண்டும். உரிமை மீறல் பிரச்சினையாகக்கூட எழுதிக் கொடுக்கலாம்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்த அவையில் எந்த ஒரு பிரச்சினை எழுப்பப்பட வேண்டுமென்றாலும் எந்த முறையில் எழுப்பப்பட வேண்டும், எந்த விதியின் கீழ் எழுப்பப்பட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படிதான் உறுப்பினர்கள் பிரச்சினைகளை மன்றத்தில் எழுப்ப வேண்டும். அவ்வாறு எழுதிக் கொடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி தந்த பிறகு அதன்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மற்றொரு சாராரும் புரிந்துகொண்டு எடுக்க வாய்ப்பாக இருக்கும். அவ்வாறு இல்லாமல் இங்கே முன்கூட்டியே எழுப்பப்படுமானால் எழுப்புகிறவர் மட்டுந்தான் பிரச்சினையைத் தெரிந்தவராக இருப்பார், பதில் சொல்லுகிறவரிடமிருந்து உறுப்பினர்கள் விரும்புகிற பதில் வராது. உரிமைப் பிரச்சினை என்று எழுதிக் கொடுத்தால் உடனடியாகக் கிளப்பலாம். ஆகவே, பிரச்சினையை எழுதிக் கொடுத்து பேரவைத் தலைவர் அனுமதி தந்த பிறகு கருத்தை எடுத்துக் கூறினால் பதில் சொல்ல வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1980 ஜூலை 21]

திரு. கு. ரமணி; அவை முன்னவர் அவர்கள் சொல்லக் கூடிய முறைகளில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், இந்த அவைக்கு வந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அங்கத்தினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய, யாரும் எதிர்பாராமல் நடந்த மோசமான நிலையை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடந்துவிட்ட நிகழ்ச்சி மோசமானதா அல்லது நல்லதா என்பதை இரண்டு பேரும் பேசித் தான் அறிந்து கொள்ள முடியும். திடீரென்று சபையிலே பிரச்சினையைச் சொல்லுவதன் மூலம் அதற்கு ஒரு முடிவு காண முடியாது. நான் காலை 8 மணிக்கே அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். அப்போதே கூட என்னைச் சந்தித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்த நிகழ்ச்சி பற்றித் தெரிவித்திருக்கலாம்.

திரு. என். பழனிவேல்: எட்டு மணிக்கு நான் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) மீனவர்களுக்கு கச்சத்தீவு அருகில் ஏற்படும் இன்னல்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, "கச்சத்தீவு அருகில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது செய்வது, சுட்டுக் கொல்வது பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் தலைவர் அவர்களே, இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையே 1974 ஜூன் திங்களில் ஒன்றும், 1976 மார்ச்சுத் திங்களில் ஒன்றும், ஆக இரண்டு கடல் எல்லை நிர்ணய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. கச்சத்தீவு, ஆதம்பாலத்திலிருந்து (Adams Bridge) பாக் ஜல சந்தி (Palk Strait) வரையிலுள்ள கடல் பரப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள எல்லையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலும் இராமேஸ்வரத்திலிருந்து ஏறத்தாழ 8 மைல் தூரத்திலுமுள்ளது. இந்த வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இந்திய நாட்டு மீனவர்களும், புனிதப் பயணம் மேற்கொள்வோரும் மேற்படி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் சென்றுவந்தது